DMC KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **CRLMP.No. 142 /2025, PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சித்ரா | Nationality | : | - |
| Father/ Husband Name | : | பொன்னுசாமி | Occupation | : | கூலி |
| Village | : | புதுவேட்டக்குடி | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 51 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2025 | | | | | |

**முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வருடம் 19 ம் தேதி மாதம் நினைவில்லை. காலை 7.30 மணியளவில் நான் என் தோட்டத்தில் குச்சி அள்ளி போட்டேன்.அப்போது முத்துசாமி வந்து எதற்கு எங்கள் இடத்தில் குச்சி அள்ளி போடுகிறாய் என்று தேவடியா, அசிங்கமாக திட்டி என் தலையில் மூங்கில் குச்சியால் தலையிலும், தோள்பட்டையிலும் அடித்தார். கண்ணன் முதுகில் உருட்டு கட்டையால் அடித்தார். இருவரும் என் புடவையை உருவி எடுத்து விட்டார்கள். நான் பாவாடை ஜாக்கெட்டுடன் இருந்தேன். கருப்பாயி என் வயிற்றில் எட்டி உதைத்து என் ஜாக்கெட்டை கிழித்து விட்டார். தனலெட்சுமி, நதியா, மாணிக்கம் மூவரும் என்னை அடித்து கொள்ளுங்கள் என்று அசிங்கமாக பேசினார்கள்.

2. பின்னர் நான் அரியலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 8 மணிக்கு சிகிச்சைக்கு சென்றேன். மருத்துவமனையில் 3 நாள் நான் சிகிச்சையில் இருந்தேன். மருத்துவர் எனக்கு மருத்துவம் செய்தார். போலிசார் யாரும் வந்து என்னை விசாரிக்கவில்லை. 21 ம் தேதி சித்திரை மாதம் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்தேன். அடித்த உடனே 8 மணிக்கு என் கொழுந்தனார் பாண்டியன் 100 க்கு போன் செய்தார், யாரும் வரவில்லை. 22 ம் தேதி குன்னம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை நான் மருதமுத்து S.I அவரிடம் கொடுத்தேன். எனது கம்ளைன்டை வாங்கி வைத்துக்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என் கம்ளைன்டை மாற்றி எழுதி விட்டார்கள். எனக்கு எதையுமே செய்யவில்லை. எதிரிக்கு சாதகமாக பணம் வாங்கி கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3. அடுத்த நாள் எனது வீட்டிற்கு பக்கத்தில் முருங்கை மரம் சாய்ந்து விட்டது என்று அங்கு சென்றேன். அப்போது கண்ணன் தண்ணி போட்டுக்கொண்டு அசிங்க அசிங்கமாக என்னை திட்டினார். நான் பட்ட அவமானத்திற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC CUM COURT, KUNNAM